தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | **:** | 84/24 | சாட்சியம் | **:** | **MW1** |
| **Name** | **:** | திரு.பிரேம்குமார் | | | |
| **Date** | **:** | **20.04.2026** | | | |
| **Time** | **:** | **10.44 a.m to 11.14 a.m** | | | |

நி.த.சா.1.பிரேம்குமார் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை

நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் HR ஆக வேலை பார்க்கிறேன். 2008 லிருந்து வேலை பார்க்கிறேன். மனுதாரர் எதற்காக வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்ற விவரம் தெரியும். எங்கள் நிறுவனத்திற்கு என்று சான்றிட்ட நிலையாணை உள்ளது. நிலையாணைபடி எழுத்து மூல பணி நியமன உத்தரவு வழங்கப்பட வேண்டும் என்றால் ஆமாம். அது போன்று மனுதாரருக்கு பணி நியமன உத்தரவு வழங்கப்பட்டது. அந்த உத்தரவு தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரர் பிப்ரவரி 2023 லிருந்து வேலைக்கு வரவில்லை என பதிலுரையில் சொல்லியுள்ளோம் என்றால் ஆமாம். 6 மாதங்கள் கழித்து வந்து ஜனவரி 2023 ற்கான சம்பளத்தை கேட்டதாக சொல்லியுள்ளோம் என்றால் ஆமாம். சம்பளம் வங்கி கணக்கில் செலுத்தப்படும். ஜனவரி 2023 ற்கான சம்பளம் இதுவரை மனுதாரருக்கு வழங்கவில்லை என்றால் ஆமாம். இன்றைய தேதி வரையில் ஏன்

வழங்கவில்லை என்றால் அவர் ஆவணங்களில் கையெழுத்து போடவேண்டும் போடாத காரணத்தினால் வழங்கவில்லை. 6 மாதங்கள் வேலைக்கு ஏன் வரவில்லை என மனுதாரர் இடம் விளக்கம் கேட்கப்பட்டதா என்றால் கேட்கப்பட்டது. வாய்மொழியாக தான் கேட்டோம் எழுத்து மூலமாக கேட்கவில்லை. வேலைக்கு வராதது சம்மந்தமாக உள்துறை விசாரணை நடத்தவில்லை. மனுதாரர் தவறு செய்து இருப்பதாகவும் அது நிர்வாகத்திற்கு தெரிய வந்ததால் வேலையை விட்டு நின்று விட்டதாகவும் சொல்லியிருக்கிறோம் என்றால் ஆமாம். மனுதாரர் செய்த தவறு சம்மந்தமாக விசாரணை நடத்தப்பட்டதா என்றால் அவரை அழைத்தோம் அவர் வரவில்லை. மனுதாரரை மிரட்டுவதற்காக தான் அது போன்ற பொய்யான குற்றச்சாட்டை சொல்கிறோம் என்றால் சரியல்ல. பொய்யான குற்றச்சாட்டு என்பதால் தான் உள்துறை விசாரணை எதுவும் மனுதாரருக்கு எதிராக நடத்தவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் நீண்ட நாட்கள் வேலைக்கு வராமல் இருந்ததால் அவருடைய இடத்தில் வேறொருவரை பணியமர்த்திவிட்டதாகவும் எனவே மனுதாரருக்கு ஒசூரில் வேலை தருவதாகவும் பதிலுரை பத்தி 7ல் சொல்லியுள்ளோம் என்றால் ஆமாம். இதே தான் தொழிலாளர் துணை ஆணையர் முன் நடந்த விசாரணையின் போதும் தெரிவித்தோம் என்றால் ஆமாம். நிர்வாகத்திற்கு வேலை கோரி மனு அளித்தால் காலி இட அடிப்படையில் வேலை வழங்கப்படும் எனவும் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் வழங்க இயலாது எனவும் தொழிலாளர் ஆணையரிடம் நடந்த விசாரணையில் தெரிவித்தோம் என்றால் ஆமாம்.

மனுதாரர் சம்மந்தப்பட்ட அனைத்து விவரங்களும் எங்களிடம் இருக்கும் என்றால் ஆமாம். அவர் எப்போது பணிக்கு சேர்ந்தார் எப்போது பணி ஓய்வு பெறுவார் என்ற விவரங்கள் எங்கள் வசம் உள்ளன என்றால் ஆமாம். அது தெரிந்து கொண்டு தான் அவர் பணி ஓய்வு பெறுவதற்கு 6 மாதங்கள் இருந்த நிலையில் ஒசூரில் பணி தருவதாக தெரிவித்தோம் என்றால் இல்லை. ஒசூரில் வேலைக்கு சேர தயாராக இருப்பதாகவும் அங்கு வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் மற்றும் வீட்டு வாடகைப்படி வழங்க வேண்டும் என தெரிவித்து மனுதாரர் பதில் அளித்திருந்தார் என்றால் எங்களிடம் வேலைக்கு வருவதாக சொல்லவில்லை. வேலைக்கு வர சொல்லி நீதிமன்றத்தில் குறிப்பாணை தாக்கல் செய்த விவரம் தெரியும். வேலைக்கு வர தயாராக இருப்பதாக சொல்லி பதில் தாக்கல் செய்த விவரம் தெரியும். அதன் பிறகும் மனுதாரருக்கு வேலை வழங்கவில்லை என்றால் வேலை கேட்டு மனுதாரர் வரவில்லை. மனுதாரர் பணியில் இருந்த போது அவர் மீது பொய்யான குற்றச்சாட்டு சுமத்தி அவராகவே வேலையை விட்டு போக நிர்வாகம் நிர்பந்தித்தது என்றால் தவறு. எந்த பொய்யான குற்றச்சாட்டும் மனுதாரருக்கு எதிராக நிர்வாகம் வைக்கவில்லை. மனுதாரரை மிரட்டி ராஜினாமா கடிதம் வாங்கினோம் என்றால் இல்லை. ராஜினாமா கொடுக்கவில்லை என்பதால் தான் அவரை வாய்மொழி பணி நீக்கம் செய்தோம் என்றால் அவரிடம் ராஜினாமா கடிதம் கேட்டோம் மனுதாரர் அதற்கு பதில் எதுவும் சொல்லவில்லை. ராஜினாமா கடிதம் கேட்டும்

கொடுக்காத காரணத்தினால் தான் மனுதாரருக்கு ஜனவரி 2023 க்கான சம்பளம் கொடுக்கவில்லை என்றால் மனுதாரர் சம்பள பட்டியலில் கையெழுத்து போடாத காரணத்தினால் தான் கொடுக்கவில்லை. பொய்யான காரணத்தை சொல்லி மனுதாரரை பணி நீக்கம் செய்த காரணத்தினால் தற்போது மனுதாரர் பணி ஓய்வு வயதை எட்டிவிட்ட காரணத்தினால் அவருக்கு பணி நீக்க தேதியிலிருந்து பணி ஓய்வு தேதிவரையில் சம்பளத்துடன் கூடிய அனைத்து பண பயன்களும் வழங்க வேண்டும் என்றால் அவர் மீது பொய்யான காரணம் சுமத்தி நிர்வாகம் பணி நீக்கம் எதுவும் செய்யவில்லை.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by him to be correct.

Sd/- S.Sujatha
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:20.04.2026.